Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒ...

# ஈழமுரசு

2-5-~~8-12-13~~-14-16-19.-

முரசு 1 23-1-1985 புதன்கிழமை (குரோதன ஆண்டு தை 10) முழக்கம் 182

## யாழ்: தீயணைக்கும் படைக்கு கனடா 15 லட்சம் ரூபா உதவி!

யாழ்ப்பாணம் மாநகரசபை அமைக்கவிருக்குந் தீயணைக்கும் படைப் பிரிவுக்கு ஏற்படவிருக்கும். செலவில் எழுபத்தைந்து வீதமான பங்கினைத் தனது அன்பளிப்பாக வழங்க இலங்கையிலுள்ள கனடியத் தூதரகம் இணங்கியுள்ளது. இதன்படி மொத்தச் செலவான சுமார் இருபத்துமூன்று லட்சம் ரூபாவில் சுமார் பதினைந்து லட்சம் ரூபாவை கனடியத் தூதரகம் வழங்கலாமெனத் தெரியவந்துள்ளது. இன்று கொழும்பு செல்லும் யாழ். மாநகர ஆணையாளர் திரு சீ வி. கே சிவஞானம் நாளை கனடிய தூதுவருடன் இது தொடர்பான முக்கிய பேச்சுவார்த்தைகளை நடாத்துவார், பெப்ரவரி முற்பகுதியில் தீயணைக்கும்படை இங்கு அமைக்கப்படும்.

# சிறில் மத்தியுவுக்கு எதிரான கட்சி விசாரணைக்கு நீதிமன்றம் நேற்று இடைக்கால தடை உத்தரவு

அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட களனி தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் சிறில் மத்தியுவுக்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சியினால் இன்று நடத்தப்படவிருந்த ஒழுங்கு நடவடிக்கை தொடர்பான விசாரணைக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

திரு. சிறில் மத்தியு மேல் நீதிமன்றத்தில் இவ்விசாரணைக்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு தாக்கல் செய்த மனுவை நேற்று ஏற்றுக்கொண்ட கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி எச் அமீன், இன்றைய விசாரணைக்காக தடை உத்தரவு பிறப்பித்ததுடன், மனு மீதான விசாரணையை பெப்ரவரி மாதம் 28ம் திகதிக்கு ஒத்தி வைத்தார். சிறில் மத்தியுவை ஏன் கட்சியிலிருந்து நீக்கக்கூடாது என்பதற்கு விளக்கம் தருமாறு கேட்கும் விசாரணை இன்று ஐக்கியதேசியக் கட்சித் தலைமை அலுவலகத்தில் நடை

—4-ம் பக்கம் பார்க்க

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உயர்மட்டப் பேச்சுவார்த்தைகள்

## லோக்சபாவில் ராஜீவ் பேச்சு; ஆயுதப் படையினரின் போக்கிலும் அதிருப்தி!

(புதுடில்லி)

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்கக் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடு எந்தத் தீர்வையும் எடுக்காதது அதிருப்தியைக் கொடுத்துள்ளது, ஆனாலும், இது குறித்து இந்திய அரசு இலங்கை அரசுடன் உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்த எதிர்பார்த்திருப்பதாக பாரதப் பிரதமா திரு. ராஜீவ்காந்தி நேற்று லோக் சபாவில் பேசுகையில் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஜெயில் சிங்கின் பாராளுமன்ற உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதத்தை முடித்து வைத்து ராஜீவ் காந்தி நேற்று மாலை உரையாற்றுகையில், ஆயுதப்படையினரை இலங்கை அதிகாரிகள் பயன்படுத்தும் விதம் பற்றியும் தனது அதிருப்தியையும், மகிழ்ச்சியின்மையையும், தெரியப்படுத்தினார். இப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பதில் தம்மால் முடிந்த அனைத்தையும் தாம் செய்யப்போவதாகவும் ராஜீவ் காந்தி சொன்னார்.

இதற்கு முன்னர் வெளியுறவு இணை அமைச்சர் குர்ஷித் அலம்கான் பேசுகையில் இலங்கையில் ஆயுதப்படையினர் அப்பாவித் தமிழ் மக்களைக் கொலை செய்தது இந்தியாவுக்குக் கவலையளிப்பதாகவும், இதனால் தமிழ் நாட்டு மக்கள் பெரிதும் மனமொடிந்திருப்பதாகவும் குறிப்பிட்டதுடன், இவ்வாறான அட்டுழியங்கள் தொடர்ந்து இடம் பெறுமானால் மேலும் பலர் இந்தியாவுள் அடைக்கலம் கோரலாம் எனவும் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர்பிரச்சினை பற்றிய ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் நேற்று லோக்சபாவில்

—4-ம் பக்கம் பார்க்க

### வாகன பட்டரி அவசிய தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விற்பனை நிலையமொன்றிலிருந்து நூற்றுக்குமதிகமான வாகன பட்டரிகள் இளைஞர்களினால் ''அவசிய தேவை''க்கென எடுத்துச் செல்லப்பட்டன.

### நேற்றைய சம்பவங்கள்

## நால்வர் சுட்டுக்கொலை! தங்க நகைகள் அபகரிப்பு

(பளை, சாவகச்சேரி நிருபர்கள்)

பளை பிரதேசத்தில் நேற்று நண்பகலுக்கு முன்னர் சீருடையினரால மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் சூட்டுச் சம்பவங்களினால் நால்வர் மரணமானதாகத் தெரியவந்துள்ளது.

நேற்றுக்காலை கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் புறப்பட்ட பவுஸர்களுக்குப் பின்னால் வந்தவர்களே இதனைச் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது

இயக்கச்சி பளை, கரந்தாய்,

—4-ம் பக்கம் பார்க்க

### இப்போது சரி!

(புத்தூர்)

குண்டு வெடிப்பால் தகர்க்கப்பட்ட கைதடி - கோப்பாய் வீதிப்பாலம், இளைஞர்கள் குழு ஒன்று மேற்கொண்ட முயற்சியால் புனரமைக்கப்பட்டு மீண்டும் போக்குவரத்திற்குப் பயன்படத் தொடங்கியுள்ளது.

### மிகத் துணிச்சலான கொள்ளை!

## சிமெந்து ஆலைப் பொருட்கள் இரண்டு லொறிகளில் சென்றன!

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் நேற்றுக் காலை நடைபெற்ற கொள்ளைச் சம்பவமொன்றின்போது உடனடியாகக் கணக்கிடமுடியாத பல லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான பொருட்களை இளைஞர் கோஷ்டியொன்று கொள்ளையடித்துச் சென்றது

இங்கு கடமையிலிருந்த சகல ஊழியர்களையும் துப்பாக்கி முனையில் நிறுத்தி விட்டே இக் கொள்ளை நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொழிற்சாலை அலுவலகங்களிலிருந்து டைப்ரைட்டர்கள் றோனியோ மெஷின்கள், மோட்டார்கள், மின்சார விசிறிகள், தொலைபேசிகள் மற்றும்

—4-ம் பக்கம் பார்க்க

## மன்னாரில் ஜெனரேட்டர் ட்ராக்டர், அரிசி கொள்ளை

(மன்னார்)

நானாட்டான் நெல் சந்தைப்படுத்தும் திணைக்களத்து அரிசி ஆலையில் நேற்று முன்தினம் இரவு ட்ராக்டரில் வந்த ஏழு பேர் துப்பாக்கி முனையில் காவலாளியை பயமுறுத்தி கதவுகளை உடைத்து, அங்கிருந்த முப்பத்தைந்து மூடை அரிசி, ஒரு ஜெனரேட்டர் ஆகியவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இவர்கள் இங்கு வருவதற்கு

—4-ம் பக்கம் பார்க்க

### கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம்

## கொல்லப்பட்ட ஐவர் அடையாளம் காணப்பட்டனர்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடத்தப்பட்ட சீருடையினரின் தர்பாரின் போது அவர்கள் மூன்று பஸ்களிலும், நடந்தும் வந்து நகரை முற்றுகையிட்டனர்.

கரடிப்போக்குச் சந்தியில் நிகழ்ந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் கிளிநொச்சியைச் சேர்ந்த பி. மகாலிங்கசிவம் (40) வட்டக்கச்சி வாசியான பேரின்பராஜா (32) சிகரெட் விற்பனையாளரான தர்மலிங்கம் ஸ்ரீஸ்கந்தரூபன் (27) ஆகியோர் மரணமடைந்து அவர்களது சடலங்கள் திங்களிரவே கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டன. மகாலிங்கசிவம் என்பவரது வயிற்றின் ஊடாக துப்பாக்கிக் குண்டு துளைத்து வெளியேறியிருந்ததாம்.

நேற்று அதிகாலை மேலும் இருவரது சடலங்கள் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்

— 4-ம் பக்கம் பார்க்க

### ஜனாதிபதியிடம் கோரிக்கை

## பருத்தித்துறை கொலைகள்; பகிரங்க விசாரணை வேண்டும்

பருத்தித்துறையில் வீதிகளில் நடமாடிய இராணுவத்தினர் அப்பாவி மக்கள் பலரைச் சுட்டுக் கொலைசெய்ததாகவும் சிலரைக் காயப்படுத்தியதாகவும், இதனால் இப்பகுதியில் பதற்றநிலை அதிகரித்துள்ளதாகவும் பருத்தித்துறைப் பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் கே. கணேசலிங்கம் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்.

இச் சம்பவத்தால் ஐவர் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள பேராசிரியர் கணேசலிங்கம் இது தொடர்

—4 ம் பக்கம் பார்க்க

### 4, 5, 6-ம் திகதி துக்க தினங்கள்

ஜனநாயக நாட்டில் எதேச்சாதிகாரமாகப் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள், மதகுருக்கள், இளைஞர்கள், ஆகியோருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக பெப்ரவரி

—4-ம் பக்கம் பார்க்க

### மாநகரசபை பணம் கொள்ளை

யாழ் மாநகரசபை சிற்றூழியர்களின் சம்பளப்பணமான பதினையாயிரத்து ஐநூற்றி

—4-ம் பக்கம் பார்க்க

### பூநகரியில் இளைஞர் கைது

(சுண்டுக்குளி)

இரகசியத் தகவலையடுத்துப் பூநகரி வில்லடிக் கிராமத்தைக்

—4-ம் பக்கம் பார்க்க

# கிராமந்தோறும் கல்வியில் விற்பன்ன மலர வேண்டும்

## குருப்பசிட்டி விழாவில் பேச்சு

(யாழ்ப்பாணம்)

''ஒரு கிராமத்தில் ஒரிருவராவது கல்வியில் மிகச்சிறந்த நிபுணராக உருவாக்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்'' என்று குரும்பசிட்டி உதயதாரகை கல்விச் சேவை நடாத்திய புலமைப் பரிசில் வழங்கப் புத்தக வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் திரு. பாலசுந்தரம் பேசுகையில் கூறினார். திரு கே ஸ்கந்தமூர்த்தி விழாவுக்குத் தலைமை வகித்தார்.

திரு பாலசுந்தரம் தொடர்ந்து பேசுகையில், 'உயர்தர மாணவர்கள் பயிற்சி பெறக்கூடிய வகையில் சிறந்த தமிழ் நூல்கள் இல்லை. இன்று வெளியிடும் ஆசிரியர் மகாதேவா அவர்களின் பௌதீக இரசாயன நூல் மிகவும் பயனுள்ளது'' என்றார்.

மாணவர்க்குப் புலமைப் பரிசில் வழங்கும் இக்கல்விச் சேவையின் முன்மாதிரியை அவர் பெரிதும் பாராட்டினார்.

திரு. ஸ்கந்தமூர்த்தி தனது தலைமையுரையில், 'இக் கல்விச் சேவை இக்கிராமத்தில் உயர்தர வகுப்புகளில் திறமைச் சித்தி பெற்றுப் பொறியியல், வைத்தியத் துறைக்குத் தெரிவாவோருக்கு ஆயிரமும், க. பொ த. சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெறும் வசதிக் குறைவானவர்களுக்கு மாதாந்தம் நூறு ரூபாயும், ஆறும் வகுப்புத் தொடக்கம் க. பொ. த. சாதாரணம் வரை வசதி குறைந்த திறமையான மாணவருக்குத் தலா எழுபத்தைந்து ரூபாவும் வழங்கப்படும்' என்று தெரிவித்தார்.

## முழுத் தமிழரையும் பகைக்கக் கூடாது

சில தமிழர்கள் செய்யும் தவறுதலால் நாம் முழுத் தமிழர்களையும் பகைக்கக்கூடாது. பௌத்தர்களான நாம் பொறுமையைக் கைக்கொள்ள வேண்டும்.'' இவ்வாறு சுகாதார அமைச்சரும் பெலியத்தை எம். பியுமான டாக்டர் ரஞ்சித் அத்தப்பத்து பெலியத்தை உதவி அரசாங்க அதிபர் புதிய அலுவலகத்தின் திறப்பு விழாவில் பேசுகையில் கூறினார்.

வடபகுதித் தமிழ் வர்த்தகர் ஒருவரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட காணியிலேயே இப் புதிய அலுவலகம் நிறுவப்பட்டது

## வரி விளம்பரம்


### ஸ்ரீ சக்கரம்

சகலவித தோஷங்களுக்கும், சௌபாக்கியங்களுக்கும் சாஸ்திர முறையில் செய்த ஸ்ரீ சக்கரம் பெற்றுக்கொள்ளலாம்.

ஏல விற்பனை நிலையம்
கோப்பாய்.

### விற்பனைக்கு

கொடிகாமம் கச்சாய் வீதியில் 15 பரப்பு தென்னங் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு; டி. இந்திரன்
82, கச்சாய் வீதி,
கொடிகாமம்.

### ஏல விற்பனை

எப்பொருளானாலும் வாங்கவும் விற்கவும் தினமும் வாருங்கள் ஏலவிற்பனை நிலையம் சந்தியடி, கோப்பாய்.

### தேவை

எம்மிடமுள்ள பலவித பொருட்களையும் வீடுகளிலும் கடைகளிலும், காரியாலயங்களிலும் மொத்தமாகவும் சில்லறையாகவும்விற்பதற்கு ஆண்களும பெண்களும் நற்சாட்சிப் பத்திரங்களுடனும, கிராம சேவையாளரின் பத்திரத்துடனும் நேரில் வரவும்.

ஏல விற்பனை நிலையம்,
கோப்பாய்.


# அடையாள அட்டை தருமாறு கோரிக்கை

பாடசாலை அடையாள அட்டைகளை, அப்பாடசாலைகளின் அதிபர்கள்மூலமாக மாணவர்களுக்கு வழங்குமாறு அரசாங்க அதிபரால் கூறப்பட்டும், இதுவரை எந்தவொரு பாடசாலையிலும் இது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும், மாணவர்கள் பாதுகாப்புப் படையினருக்குத் தம்மை அறிமுகப்படுத்துவதற்கும், பாடசாலையில் தேவைகளைச் செய்வதற்கும், அன்றாட சிரமங்களை குறைத்துக்கொள்வதற்கும் இந்த அடையாள அட்டைகளை ஒவ்வொரு பாடசாலை அதிபர்கள் மூலமாகவும் மாணவர்களுக்கு வழங்குமாறு வட மாநிலக் கல்விப் பணிப்பாளர், அதிபர்கள் சங்கத் தலைவர், பிரதம கல்வி அதிகாரி ஆகியோருக்கு ஐக்கிய மாணவர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அமெரிக்காவில்

# கல்வி பயிலும் ஈழத்தமிழ் மாணவர்களின் அமைப்பு

(கைதடி)

அமெரிக்காவில் உயர்கல்வியைப்பயிலும். இலங்கையைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் பலர் தாமாக ஒன்று சேர்ந்து ''மாணவர் அவை'' என்ற அமைப்பினை உருவாக்கியுள்ளனர்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் கழக பொதுக் கூட்டமொன்றில் இவ் அவையும் பங்கு கொண்டதாக தெரிய வருகிறது. இலங்கையில் ஏற்பட்டுள்ள இனப் பிரச்சினையையும் அப்பாவி மக்களின் கொடூரத்தனமான கொலைகளையும் இவ் அவையினர் மேற்படி கூட்டத்தில் சுட்டிக்காட்டி அங்குள்ளவர்களுக்கு இங்கு ஏற்பட்டுள்ள நிலைமையை தெளிவாக்கினர்.

இதன் பின்னர் அக் கழக சிரேஷ்ட அங்கத்தவர் பலர் இப் பிரச்சினைகளைத் தீர்க்க தம்மாலான முழு ஒ துழைப்பினையும் வழங்குவதாகத் தெரிவித்து மாணவர் அவையினரிடமிருந்து மகஜர் ஒன்றையும் பெற்றுக்கொண்டதாக அறியப்படுகின்றது.




❋ ஆனைக்கோட்டை நவரட்ணம் மரியம் தம்பதிகளின் மகன் றஞ்சித் இன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்

❋ முரசுமோட்டை இரகுநாத சர்மா ருக்மணிபாமா தம்பதிகளின் மகன் கேசவசர்மன் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ பண்டத்தரிப்பு அப்புத்துரை சரோஜினிதேவி தம்பதிகளின் மகன் சுபாகரன் இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்

❋ ஆனைக்கோட்டை அந்தோனிப்பிள்ளை லீலாவதி தம்பதிகளின் மகன் செபஸ்ரியன் நவம் இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ மல்லாகம் கணேசமூர்த்தி தம்பதிகளின் மகன் சபிலன் இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ அரசடிவீதி யோகராசா நகேஸ்வரி தம்பதிகளின் மகள் தர்சிகா இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ வல்வெட்டித்துறை துரைசிங்கம் இந்திராதேவி தம்பதிகளின் மகள் விஜிதா இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ கோப்பாய் வடக்கு திலகராஜா நாகலட்சுமி தம்பதிகளின் மகன் தர்மேந்திரன் இன்று தனது நாலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ காரைநகர் இரத்தினசிங்கம் தவராணி தம்பதிகளின் மகன் பிரியதர்ஷன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

# புத்தூரில் பிரஜைகள் குழு

பிரஜைகள் குழுக்கள் அரசியல் லாபம் பெறும் நோக்கோடு இயங்கக் கூடாதென்றும், நூற்றுக்கு நூறுவீதம் மக்களின் அன்றாட தேவைகளைக் கவனித்துக் கஷ்ட நிலையைப் போக்கும் பணியிலேயே அவை ஈடுபடவேண்டுமென்றும் புத்தூர் பிரஜைகள் குழு அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சட்டத்தரணி சதா லோகேஸ்வரன் அவர்கள் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

மேற்படி குழுக் கூட்டம் ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு ஆவரங்கால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் நடைபெற்றது. இதன் தலைவராக சட்டத்தரணி சதா லோகேஸ்வரனும் உபதலைவராக திரு.க சின்னத்துரையும், பொருளாளராக திரு. சி மாணிக்கவாசகரும் தெரிவாகினர். செயலாளராக திரு. சி.மாணிக்கவாசகர் அவர்களும் நிர்வாகசபை அங்கத்தவர்களாக மேலும் ஐந்து பேரும் தெரிவானார்கள்.



யாழ். இந்துக் கல்லூரியில் 1983 மார்கழி க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் எட்டுப் பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்ற பல மாணவர்களில் முன்னிலையில் நிற்கும் செல்வன். பூபாலன் லக்சுமணனுக்கு, கந்தர்மடம் யூனிவேர்சல் கல்வி நிறுவன இயக்குனரும யாழ். இந்துவின் பழைய மாணவருமான பா. ஐங்கரநேசன் வழங்கிய தங்கப் பதக்கத்தை கல்லூரி அதிபர் திரு. ச. பொன்னம்பலம் அணிவித்த போது எடுத்தபடம்.

## ஓராண்டு நினைவஞ்சலி



### "சுதாகரன்"

மலர்வு: 11-11-81 உதிர்வு: 23-01-84

எமதன்புச் செல்வமே!
எம்குடும்பத்திற்கு ஒளிவீசும் திருவிளக்காய் தோன்றி
மூன்றாண்டு ஒளிபரப்பி எம் முகமலர்ந்த வேளை,
காலனவனின் கடும்பிடிக்குள் அகப்பட்டு
சென்றிட்ட நின்னை எங்ஙனம் மறப்போம்
ஓராண்டு கடந்து விட்டோம் உம் நினைவைத்தாங்கி
இன்னும் என்னும் உன்நினைவால் வாடும்.

உன் அன்பு அம்மா, அம்மம்மா, அம்மப்பா, தில்லைமாமா, பெரியமாமா, குஞ்சுசித்தி, ரவிமாமா, ஏழாலை நிற்று சித்தி அம்மம்மா, அப்பப்பா, சந்திரா, சித்தப்பா, சுசீலா அன்ரி, சித்தப்பா, கவிதா அக்கா, அப்பா சித்தி, மூத்தமாமா, ராஜா மாமா, அச்சாமாமா, செல்லமாமா.

''மலர் பவனம்''
மலி ஓடை,
வல்வெட்டி.


மாதாந்தம் 36% வட்டி விழாக்கால சலுகை!

15-12-84 முதல்
30-01-85 வரை

36% அதிக வட்டி வழங்கும் நிதி நிறுவனம்
தமிழர் நிதியம்
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ☎ 22437

உறுதியான பாதுகாப்பிற்கும், மேலதிக லாபத்திற்கும் எம்மிடம் வைப்பிலிடுங்கள்.

ஈழமுரசு



### உதய சிந்தனை

சுய ஆட்சியே நம்முடைய சகல விதமான நோய்களையும் மிக நிச்சயமாகத் தீர்க்கக் கூடிய மருந்து என்று நான் பரிபூரணமாக நம்புகிறேன்.

- மகாத்மா காந்தி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

23-1-85 புதன்கிழமை (இரத்தாக்ஷி தை 10)

# குடியேறுவது வேறு! குடியேற்றுவது வேறு!

தமிழ் மக்களின் பாரம்பரியமான பிரதேசங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றுவது என்ற அரசாங்கத்தின் தீர்மானம் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்படுமென்பது இப்போது ஊர்ஜிதமாகிவிட்டது.

பாடசாலைப் பிள்ளைகளுக்கு இலவச பாடப்புத்தகம் வழங்கும் வைபவத்தில், சிங்கள மக்களுக்கு இலவசமாகக் காணி வழங்கும் தமது அரசின் ''குடியேற்றத் திட்ட'' முடிவை அதி உத்தம ஜனாதிபதி பறைசாற்றியுள்ளார்.

அரிவரிப் பாடப்புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளத் திரண்டிருந்த சின்னஞ்சிறிசுகளால் நிரம்பி வழிந்த அந்தக் கூட்டத்தில், நாடு முழுவதுமுள்ள மக்கள் தெரிந்து கொள்வதற்காகவே தமிழ்ப்பிரதேசங்களுக்கான சிங்களக் குடியேற்றம் பற்றி அதி உத்தமர் பேசியுள்ளார்.

''தமிழ்ப்பிரதேசங்கள் என்று ஒன்றும் இடையாது. இதுவெல்லாம் ஏற்க முடியாத சித்தாந்தம்'' என்றும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

அரும்பெரும் உண்மையை 1985ன் ஆரம்பத்திலேயே கண்டுபிடித்த ஆட்சியாளர்களைக் கட்டியணைத்து, முதுகில் ஒரு தட்டுத்தட்டி, பாராட்டவேண்டும் போலத் தெரிகின்றது.

இந்திய அரசியலில், தனிநாடு கேட்டு அண்ணா தலைமையில் போராட்டம் நடத்தப்பட்டபோது, அந்நாட்டு அரசியல் தலைவர்கள சென்னையில் வட இந்தியர்களைக் குடியேற்ற எத்தனிற்கவில்லை.

அதற்குப் பதிலாக தமிழர்கள் வாழும் தென்னிந்திய மாநிலத்தை ''தமிழ்நாடு'' என்று பெயர் மாற்றிக் கொடுத்து, பிரச்சனையைத் தணித்தனர்.

வடக்கும் கிழக்கும் தமிழ் மக்கள் பெருந்தொகையாக வாழும் பிரதேசங்கள் என்பதும், அவர்களின் பாரம்பரிய பிரதேசங்கள் என்பதும் இந் நாட்டின் அனைத்து மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அப்பட்டமான உண்மை!

ஆனால் இங்கு சிங்கள மக்கள் வாழ்ந்துள்ளனர்; சிங்கள மொழிப் பாடசாலைகள் இருந்திருக்கின்றன; சிங்கள மக்களின் வழிபாட்டுத் தலங்கள் சீராக இயங்கியிருக்கின்றன; சிங்கள மக்களின் வர்த்தக நிலையங்கள் இருந்திருக்கின்றன.

துரதிர்ஷ்டவசமான 1983 ஆடிக் கலவரங்களுக்குப் பிறகு இவைகள் செயலற்ற ஒரு ஸ்தம்பித நிலையை அடைந்தன.

இதற்கான முழுப்பொறுப்பையும் அரசாங்கமே எடுக்க வேண்டும். அப்பாவி மக்கள் மீது குற்றம் சுமத்த முடியாது.

இந்த நிலையில், சுலபமாகத் தீர்க்கப்படக் கூடிய இனப் பிரச்சினையை ஒரு புறத்தே ஒதுக்கி வைத்து விட்டு, புதிய கண்டுபிடிப்பொன்றுடன் தமிழர் வாழும் வட, கிழக்குப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்த முனைவது ஒரு விஷப் பரீட்சையாகும்.

இரு இன மக்களையும் மோதவிட்டு விளையாடடுப் பார்ப்பதற்காக களம் அமைத்துக் கொடுக்கும் ஒரு முயற்சியாகவே இதனை நாம் கருதுகின்றோம்

வாதம் செய்பவர்கள், எதிர் வாதம் புரிபவர்கள் ''சிங்களப் பகுதிகளில் தமிழர்கள் நிரந்தரமாக வாழவில்லையா? காணி, நிலபுலன், கட்டடங்களுடன் பரம்பரையாகப் பல தமிழ்க் குடும்பங்கள் சிங்களப் பிரதேசங்களில் வாழ்வது போல வட, கிழக்கில் சிங்கள மக்கள் ஏன் வாழக்கூடாது'' என்று கேட்க ஆரம்பித்துள்ளனர்.

நியாயமான கேள்விதான்! அப்படி வாழக்கூடாது என்று யார் சொன்னார்கள்?

ஆனால் அதனையும் இதனையும் ஒன்றாகக் கணித்துப் பேசுவதை மட்டும் ஏற்றுக்கொள்ள முடியாது.

தென்னிலங்கையில் வாழும் தமிழர்கள் குடியேற்றப்பட்டவர்களல்லர். அரசாங்கமோ அல்லது எந்தவொரு அரசியல் கட்சியோ தமிழரைச் சிங்களப் பிரதேசங்களில் கொண்டு சென்று குடியேற்றவில்லை.

தமது தொழில் நிமித்தமாக அங்கு சென்றவர்கள், தமது சொந்தப் பணத்தினால் காணிகளையும், வீடுகளையும் அங்கு வாங்கினார்களே தவிர, அரசிடமிருந்து எதனையும் 'இலவச'மாகப் பெற்று குடியேற்றப்படவில்லை.

ஆனால் இப்போது வட, கிழக்குத் தமிழர் பிரதேசங்களில் நடைபெற விருப்பது அதுவல்ல. திட்டமிட்ட குடியேற்றமாகும்.

ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் நூறு குடும்பங்களை இங்கு கொண்டு வந்து குடியேற்றப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. காணியும், வீடும் இவர்களுக்கு இலவசமாகக் கிடைக்கப்போகின்றது.

அதற்கு முதல் இங்கேயே பிறந்து, இங்கேயே வாழ வழியின்றி, ஒரு அங்குல நிலம் கூட இன்றி, தவித்துக் கொண்டிருக்கும் ஏழைத் தமிழர்களை முதலில் குடியேற்றக் கூடாதா?

குடியேறுவதையும், குடியேற்றுவதையும் ஒன்றாகக் கருதி ''நெருப்பையும் பஞ்சையும்'' அருகருகே வைக்கும் முயற்சி பிரச்சினையை வளர்க்கத்தான் உதவுமே தவிர, தீர்க்க உதவாது என்பதே எமது கருத்து.

## ரஷ்யாவிடம் ஜனாதிபதி றீகன் கோரிக்கை

# உறவை வளர்ப்போம் ஆனால் எமது ஏவுகணைத் திட்டத்தை எதிர்க்காதீர்

(வாஷிங்டன்)

''சோவியத் யூனியனுடனான பல்துறைப்பட்ட உறவுகளை மேன்மேலும் விரிவுபடுத்திக் கொள்ளவே அமெரிக்கா விழைகிறது. இந்த அடிப்படையிலேயே சோவியத் யூனியன் வெளிவிவகார அமைச்சருடனான ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றன. ஆயினும் விண்வெளியில் ஏவுகணைப் பாவனை பற்ற அமெரிக்காவின் திட்டத்தை சோவியத் யூனியன் எதிர்ப்பதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்'' என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகன் நேற்று கருத்து வெளியிட்டார்.

சோவியத் யூனியன் வெளிவிவகார அமைச்சர் திரு குரோமிக்கோ கடந்த வாரம் மாஸ்கோவில் அமெரிக்க செனட்டரான திரு. பேரி ஹாட்டைச் சந்தித்து உரையாடியபோது ''அமெரிக்காவுடனான நல்லுறவை விருத்தி செய்து கொள்ளவே சோவியத் யூனியனும் விரும்புகிறது. ஆனால் அமெரிக்கா விண்வெளியிலும் ஏவுகணை பாவனை, ஆயுதப் போட்டி நிலையினை விலக்கிக் கொள்ள வேண்டும்'' என்று அபிப்பிராயம் தெரிவித்திருந்தது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

எவ்வகையிலும் சமீப காலத்தில் மேற்படி இரு வல்லரசுகளுக்குமிடையிலான உறவுகள வலுப்படுவதற்குரிய நன்நிலை உண்டாகி அது செயலுருப் பெற்று வருவதும் உலக சமாதான நிலைக்கு ஊக்கம் தருவதாக அமைகிறது என அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

அணு ஆயுதப் பரிகரணம் தொடர்பான இரு வல்லரசுகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் நடைபெறவுள்ளதும் இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

## கட்டபொம்மன் ஜாக்ஸன் சந்தித்த இடத்தில்

(சென்னை)

இராமநாதபுரம் இராமலிங்கவிலாஸ் அரண்மனையில் ஒலி, ஒளிக் காட்சிகள் மாநில அரசு ஏற்பாட்டில் விரைவில் நடைபெறும் என்று நேற்றுத் தெரிவிக்கபட்டது. இந்த இடத்தில் தான் அந்நியரைப் புறமுதுகிட்டோடச் செய்து பிறந்த மண்ணின் பெருமை காத்த வேங்கை மார்பன் வீரபாண்டிய கட்டப்பொம்மன்— பிரிட்டிஷ் கலெக்டர் ஜாக்ஸன் சந்திப்பு நிகழ்ந்தது என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது

## பாரதம் வென்றது

(டாக்கா)

பங்களாதேஷ் தலைநகரான டாக்காவில் நடைபெறும் ஹொக்கிப் போட்டியின் முதல் பிரிவில் பாரதத்திடம் இலங்கை 6— 0 கோல்களால் படுதோல்வியடைந்துள்ளது.

## பாரத-செக் வர்த்தக உறவு

(புதுடில்லி)

பாரதமும், செக்கோ சிலேவேகியாவும் பரஸ்பரம் வர்த்தக உறவுகளைப் பலப்படுத்திக் கொள்ளவுள்ளன. இந்தவகையில் செக்கோசிலேவேகியாப் பிரதிநிதி ஒருவர் புதுடில்லி வந்துள்ளார்.

## எம். ஜி. ஆர். பற்றிய தகவல்கள்

# சுயமாக நடக்க முடிகிறது 2 வாரங்களில் திரும்பலாம்

(நியூயோர்க்)

தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் மாற்றுச் சிறுநீரக அறுவைச் சிகிச்சையின்பின் மிகவிரைவாகக் குணமடைந்து வருகிறார் என்றும் இன்னமும் இரு வாரங்களில் அவர் புறூக்லின் மருத்துவமனையை விட்டு வெளியேறிவிடமுடியும் என்றும் அம் மருத்துவமனை டாக்டர் பெல்ஸ்க்கி நேற்றுத் தெரிவித் தெரிவித்தார்.

''கைத்தடியின் உதவியின்றியே அவரால் இப்போது நடக்க முடிகிறது. அவர் இப்போதெல்லாம் தெளிவாகப் பேசுகிறார்'' என்று மேலும் தெரிவித்தார்.

இத்தகவல்களைக் கொண்டு நோக்குமிடத்து அவர் பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் சென்னை வந்து முதலமைச்சர் பதவியேற்பார் என்று முன்னர் கூறப்பட்ட நிலையில் மாற்றம் உண்டாகலாம் எனத் தெரிகிறது. ஆயின் முதலமைச்சர் பதவியேற்பது மேலும் தாமதத்திற்குள்ளாகலாம் எனச் சொல்லப்படுகிறது

# ''நீதி கிடைப்பதில் தாமதம் கூடாது'' — பாரதப் பிரதமர்

(புதுடில்லி)

''நீதித்துறையில் மாற்றம் தோற்றுவிக்கப்பட வேண்டும். நீதி கிடைப்பதில் தாமதம் நீங்க வேண்டும்'' என்று பிரதமர் திரு. ராஜீவ் காந்தி நேற்று புதுடில்லியில் தன்னைச் சந்தித்து உரையாடிய வழக்கறிஞர் குழுவிடம் தெரிவித்தார்.

''நீதித்துறையை வலுப்படுத்துவது மத்திய அரசின் மிக முக்கிய நோக்கங்களில் ஒன்று'' என்று பிரதமர் சொன்னார்.

இது இவ்வாறிருக்க, பிரதமர் புதுடில்லியிலுள்ள வெளிநாட்டுத் தூதர்களுக்கு நேற்று விருந்துபசாரம் ஒன்றினை அளித்துக் கௌரவித்தார்.

பிரதமர் பதவியேற்றபின் அவர் வெளிநாட்டு ராஜ்யப் பிரதிநிதிகளுக்கு அளித்த முதல் விருந்து இதுவாகும்.

## ''தோல்வியினால் தளராதீர்''

(மதுரை)

பொதுத் தேர்தலில் படுதோல்வியைத் தழுவிய போதிலும் ஜனதாக்கட்சி மக்களாதரவைப் பெறும்வகையில் தொடர்ந்தும் தன் முயற்சிகளை மேற்கொள்ளவிருக்கிறது.

மங்களூரில் இக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான, திரு. வாஜ்பாய் உறுப்பினரிடையே பேசுகையில் ''தேர்தலில் தோற்றாலும் மனம் தளர்ந்து விடாதீர்கள். எதிர் வரும் சில சட்டசபைத் தேர்தல்களில் நம்பிக்கையுடன் போட்டியிடுவோம்.'' என்று கூறினார்.

இதேவேளை தமிழ் நாட்டில் ஜனதாக் கட்சி தோல்வியடைந்ததால் தன் பதவியை தமிழ் நாடு மாநிலத் தலைவர் திரு. இரா. செழியன் ராஜினாமாச் செய்திருந்த போதிலும் அதனைக் கட்சியின் தலைமைப் பீடம் ஏற்கமறுத்துவிட்டது.

கட்சியின் மாநில செயற்குழு இன்னமும் இருவாரங்களில் கூடும் என்று திரு. செழியன் நேற்று மதுரையில் தெரிவித்தார். கட்சிக்குப் புத்துயிர் அளிப்பது குறித்து அப்போது ஆராயப்படும் என்றார் அவர். தென் சென்னைத் தொகுதியில் வைஜந்திமாலாவிடம் இவர் சென்ற தேர்தலில் தோற்றது தெரிந்ததே.

## சோழர் கால சிலை

(தஞ்சாவூர்)

தஞ்சாவூரிலிருந்து வரலாற்றுச் சிறப்புமிக்க சோழர் காலச்சிலைகள் மூன்று வாஷிங்டனில் நடைபெறும் கண்காட்சிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன

## வைஜயந்தி எம். பி. கன்னிப் பேச்சு

# ''ஏழ்மை நீங்கி வேலைவாய்ப்பு பெருக முயற்சி வேண்டும்''

(புதுடில்லி)

''குடும்ப நலத்திட்டம் சிறப்பாகக் கையாளப் படவேண்டும். நாட்டில் ஏழ்மை நிலை அகற்றப்பட ஆக்கபூர்வ நடவடிக்கைகள் செயற்படுத்தப் படவேண்டும்'' என்று தமிழ் நாடு தென் சென்னை லோகசபைத் தொகுதியில் இருந்து இந்திரா காங்கிரஸ் சார்பில் வெற்றியீட்டிய பிரபல நடிகையும், சிறந்த நர்த்தகியுமான திருமதி வைஜயந்திமாலா பாலி லோகசபையில் தனது கன்னிப் பேச்சை நிகழ்த்துகையில் கூறினார்.

'கிராமப் புறங்களில் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கப்பட வேண்டும்'' என்றும் அவர் சபையில் கோரிக்கை விடுத்தார்.

அ. தி. மு. க., எம். பி. திரு. குழந்தைவேலு தனது உரையில், ''கட்சித் தாவல் தடை மசோதா கொண்டுவருவதனை நாம் வரவேற்கிறோம்'' என்றார்.

சாந்தி - (யாழ்நகர்)
12-1-85 முதல்
10.30, 2.15 மட்டும்
கமல், சுலக்ஷனா, ராதா, தங்கவேலு நடித்த
A V. M. இன்
தூங்காதே தம்பி தூங்காதே
(ஈஸ்மன் கலர்)

ஈழமுரசு

## யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கி "வரட்சி நிலை" க்கு மாறுகிறது!

யாழ். ஆஸ்பத்திரிக்கு இரத்ததானம் செய்பவர்கள் தொகை குறைந்துவருவதால், ஆஸ்பத்திரி இரத்த வங்கி ''வரட்சிநிலை''க்குத் தள்ளப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தின் தற்போதைய தினசரிச் சம்பவங்களால் அவசர சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவோர் தொகை அதிகரித்து வருகின்றது ஆனால் இரத்ததானம் செய்வோர் தொகை அருகி வருகின்றது. இந்நிலை தொடருமானால் அவசர நோயாளிகள் மரணத்தை எதிர்நோக்கும் அபாயமும் ஏற்படும். எனவே தாராள சிந்தையாளர்கள் இரத்ததானம் செய்து பல உயிர்களைக் காக்க முன்வர வேண்டுமென்று ஆஸ்பத்திரி சுப்பிரின்டன் டாக்டர் நச்சினார்க்கினியர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### பிரிகேடியர் நளின் ஆலோசனை

# ஊரடங்கு நேரம் நோயாளியை மருத்துவமனை கொண்டு செல்ல 'வெள்ளைக்கொடி' அவசியம்!

ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள நேரத்தில் நோயாளி ஒருவரை அண்மையிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லவேண்டியிருப்பின், நோயாளியின் உறவினரோ, அல்லது நண்பரோ வெள்ளைக் கொடியொன்றைத் தாங்கியவராய் வீதியில் சென்று ஒரு வாகனத்தை ஒழுங்குபடுத்தலாம் என்று வடபகுதி இராணுவ இணைப்பதிகாரி, பிரிகேடியர் நளின் செனிவிரத்தின பொது மக்களுக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

வைத்தியர்கள் வாகன உபயோகம், நோயாளிகள் போக்குவரத்து போன்ற பல்வேறு விடயங்கள் பற்றியும் யாழ். அரசினர் ஆஸ்பத்திரி டாக்டர்கள் குழுவொன்று பிரிகேடியரை அவரது அலுவலகத்தில் சந்தித்து எடுத்து விளக்கியது.

இச்சந்திப்பின்போது பின்வரும் மூன்று நடைமுறைகளையும் பின்பற்றுமாறு பிரிகேடியர் நளின் செனிவிரத்தின ஆலோசனை வழங்கினர்.

* நோயாளரின் உறவினரோ, நண்பரோ நோயாளியை அண்மையிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்ல, வாகனமொன்றை அமர்த்த வேண்டின், அவர் வெள்ளைக் கொடியொன்றைத் தாங்கியவராய் வீதியில் சென்று ஒரு வாகனத்தை ஏற்படுத்தலாம்.
* ஏற்கனவே வாகன உடைமைக்கும், பாவனைக்கும் அங்கீகாரம் பெற்ற அவ்வாகன உரிமையாளர் / செலுத்துநர் ஊரடங்குச் சட்ட நேரத்தில் நோயாளியை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் போது, வாகனத்தில் ஓர் வெள்ளைக் கொடியைக்கட்ட வேண்டும்.
* நோயாளியை மருத்துவமனையில் சேர்த்ததன் பின், அவ்வாகனத்தில் உரிமையாளர் / செலுத்துநர் அல்லது வாகனத்தில் பிரயாணம் செய்வோர், அவ்வாகனம் நோயாளியை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல பாவிக்கப்பட்டது என்பதற்கு அத்தாட்சியாக நோயாளியை அனுமதித்த வைத்தியரின் கடிதம் ஒன்றை வைத்திருத்தல் வேண்டும். இக்கடிதம் வாகனத்தின் பதிவு இலக்கத்தையும் கொண்டதாக அமைய வேண்டும்.

## சம்பூரில் மரண தண்டனை; படகு கொள்ளை சாம்பல்தீவில்

(திருமலை)

மூதூரிலுள்ள சம்பூர் என்ற இடத்தில் சரவணமுத்து சிவதாஸ் (28) என்ற இளைஞருக்கு நேற்று அதிகாலை மரண தண்டனை வழங்கப்பட்டது.

கடற்கரையில் நின்ற இவர், இளைஞர் குழுவொன்றைக் கண்டதும் கடலில் பாய்ந்து நீந்திச் சென்றாராம். வள்ளமொன்றில் துரத்திச் சென்ற இளைஞர்கள் இவரைப் பிடித்து வந்து, 'சமூகத்துரோகி' என்ற குற்றச்சாட்டில் மரணதண்டனை வழங்கினராம்.

இவரது மூத்த சகோதரர் ஒருவர் முன்னர் இரு தடவை சுடப்பட்டுக் காயத்துடன் தப்பியவர் எனவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் சாம்பல்தீவில் கடற்கரையில் கட்டப்பட்டிருந்த படகொன்றை இளைஞர்கள் கடத்திச் சென்றுவிட்டதாக அதன் சொந்தக்காரர் உப்புவெளிப் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

## மகாபொல மாணவர்கள் 29ம் திகதி வரவேண்டும்

யாழ் பல்கலைக்கழக 1984/85ம் கல்வி ஆண்டுக்குரிய மகாபொல புலமைப்பரிசில் வழங்குவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களைச் சந்திப்பதற்காக இம்மாதம் 29ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை ஒன்பது மணிக்கு கொழும்பில் இருந்து அதிகாரிகள் வருகின்றனர்.

அன்னுல் சம்பந்தப்பட்ட மாணவர்கள் தமது தேசிய அடையாள அட்டை, தற்காலிக பல்கலைக்கழக அறிமுக அட்டை ஆகியவற்றுடன் பல்கலைக்கழக சபை அறைக்கு அன்றைய தினம் சமூகமளிக்குமபடி உதவிப் பதிவாளரால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அன்று சமூகமளிக்காதவர்கள் பின்னர் கொழும்புக்கு போகவேண்டி ஏற்படும்.

### 4, 5, 6...

—1ம் பக்கத் தொடர்

மாதம் 4ம, 5ம் 6ம் திகதிகளில் இறைவழிபாடுகளையும், மௌனஞ்சலியையும் ஆலயங்கள் கோவில்கள், மசூதிகள் யாவற்றிலும் அனுஷ்டிக்கும்படி உலக மத ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது

### சிறில்மத்தியு....

—1-ம் பக்கத் தொடர்

பெறவிருந்தது கட்சித் தலைவரான ஜனாதிபதி ஜெயவர்த்தன தலைமையில் ஒன்பது பேர் கொண்ட குழுவொன்று விசாரணைக்கென நியமிக்கப்பட்டிருந்தது.

### மன்னாரில் ஜென.....

1-ம பக்கத் தொடர்ச்சி

முன்பு நானாட்டான் பகுதியிலுள்ள ஒரு அகதி முகாமுக்குச் சென்று கூடாரங்களைக் கேட்டனர் அங்கு அவை இல்லை எனத் தெரிவிக்கப்பட்டதாம.

கடந்த ஞாயிறு இரவு உயிலங்குளம் மைதலசேவை நிலையத்துக்குச் சொந்தமான உழவு யந்திரம் இனம் தெரியாத பத்துப்பேரால கடத்திச் செல்லப்பட்டது. அந்த உழவுயந்திரம் இடை நடுவில பழுது அடைந்ததால வேறு உழவுயந்திர உதவியுடன் கட்டி இழுத்துச் செலலபபடடது

### பூநகரில்...

— 1ம் பக்கத் தொடர்

கவச வண்டிகள் சகிதம் சுற்றிவளைத்த இராணுவத்தினர் இரு வாலிபர்களைப் பிடித்துக் கொண்டு சென்றுள்ளனர் க. இரத்தினசிங்கம், யா சிறீஸ்கந்தராசா ஆகிய இரு வாலிபர்களுமே இராணுவத்தினரிடம் சிககிக்கொண்டவர்களாவர்.

### பருத்தித்துறை ..

1ம் பக்கத் தொடர்

பாகப் பகிரங்க விசாரணை நடத்துமாறும் எதிர்காலத்தில் இவ்வாறு நடவாதிருக்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர், தேசிய பந்தோபஸ்து அமைச்சர் ஆகியோருக்கும், இது தொடர்பான கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

### சிமெந்து...

— 1ம் பக்கத் தொடர்

சகல மின்சார உபகரணங்களும் கொள்ளையடித்துச் செல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் ஐம்பது பேரடங்கிய கோஷ்டியினர் பளபளக்கும் துப்பாக்கிகள் சகிதம் இககொள்ளையை நடத்தினராம்.

கொள்ளை நடைபெற்ற சமயம சிமெந்துத தொழிறசாலையின் சகல வாசல்களையும் ஆளைஞர்களே காவல் புரிநததாகவும், சுமார் ஒரு மணி நேரம் சகலரும் இவர்களது கட்டுப்பாட்டிலேயே இருநததாகவும் தெரிவிக்கப்பட்டது.

கொள்ளை நடைபெற்று சில மணி நேரத்தின்பின் இராணுவத்தினர் ஸ்தலத்துக்கு வநது வீதியால் போவோர் வருவோரைக் கடுமையாகச் சோதனையிட்டனர்.

### நால்வர்...

—1-ம பக்கத் தொடர்

புதுக்காடு ஆகிய இடங்களில் இவர்கள் சுடுக் கொல்லப்பட்டனராம். பல மணி நேரமாக வீதியருகில் கிடந்த சடலங்கள் பின்னர் பொதுமக்களால் எடுததுச் செல்லப்பட்டன.

அதேவேளையில் இதேகோஷ்டியினரால் வீதிகளில சென்ற பலரது மோதிரம், சங்கிலி போன்ற தங்க ஆபரணங்கள், மணிக்கூடுகள் பலவந்தமாக அபகரித்துச் செல்லப்பட்டதாகவும் புகார் செய்யப்பட்டது.

அரியாலை சாவகச்சேரி பகுதியில ஐந்துக்கும் மேற்பட்ட இளைஞாகள் சீருடையினரால் நேறறுக் கைது செய்யப்பட்டனராம். அவர்களின் பெற்றோரும உறவினர்களும் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரைச் சந்திதது இதுபறறி முறையிட்டனர்.

குடாநாட்டின் பல முக்கியமான வீதிகளில் கண்ணிவெடி வைக்கப் பட்டிருக்கலாமென்ற சந்தேகத்தின் பேரில் ராணுவத்தினர் சில குறிபபிட்ட வீதிகளில் நடந்து சென்றனர்.

### மாநகர ..

—1-ம் பக்கத் தொடர்

எண்பது ரூபா நேற்றுக்காலை ஒன்பது மணியளவில், சப்மெஷின் துப்பாக்கியுடன் வந்த இனந்தெரியாத இளைஞர்களால் கொள்ளையடிததுச் செல்லப்பட்டது.

### பேசாலையில் சோதனை

(மன்னார்)

நேற்று பேசாலைக் கடலில் கடற்படைக் கப்பல் அடிக்கடி ரோந்து சுற்றியது. கரையில் இருநது பாதுகாப்புப் படையினா வேறு படகு மூலம் அக்கப்பலுக்கு போய்வருவதும் காணப்பட்டது பேசாலையில் சில வாகனங்களும், வீடுகளும் சோதனையிடப்பட்டன.

### இனப் பிரச்...

— 1ம் பக்கத் தொடர்

கொண்டு வரப்பட்டது

ஆயுதப்படையினரின் தாக்குதலுக்கும் துன்புறுத்தலுக்கும் இந்திய மீனவரும உள்ளாகுமளவு இலங்கைப் படையினர் இந்திய கடற்பிரதேசத்தில் ஊடுருவுவது பாரதத்திற்கு மிகவும் கவலையளிக்கிறது எனக்குறிப்பிட்ட அமைச்சா இது குறித்து இந்தியா மூன்று தடவை வன்மையான ஆட்சேபத்தைத் தெரிவித்ததுடன் உயிர் உடமைக்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கு நட்டஈடு கோரியதையும சுட்டிக்காட்டினார்.

சர்வகட்சி மாநாடு பற்றிக் குறிபபிடும் போது அது பலத்த ஏமாற்றத்தையும் விரக்தியையுமே தந்தது என்ற அமைச்சர் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு அரசியல் தீர்வுதான் சுமுகமான தீர்வாகும என்றும் வலியுறுத்தினர். பிரேரணையில் பேசிய சபை உறுப்பினர்கள் இலங்கையின் இனபபிரச்சினை குறித்த தமது அக்கறையை வெளிபபடுத்தியதோடு அது தீாத்துவைக்கப்பட வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினர்கள்.

### கிளிநொச்சி...

1-ம் பக்கத் தொடர்ச்சி

டன. குமரபுரம் பரந்தனைச் சேர்ந்த தங்கராஜா நாகராஜா (26) மலையகத்தைச் சேர்ந்த ரவி (17) ஆகியோரது சடலங்களே இவை. ரவி என்ற வாலிபன் இங்குளள வீடொன்றில் மாடுமேய்க்கும் வேலை செய்து வந்தவர் எனத் தெரிவிக்கபபடுகிறது. மற்றொரு சடலம் அடையாளம் காணப்படவில்லை.

மேற்படிச் சம்பவத்தில் காயமுற்ற எஸ் சபாரத்தினம் (45) வைரமுதது திருச்செல்வம் (28) என்ற இருவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சபாரத்தினம் என்ற இ போ. ச. சாரதியின் இரு கால்களிலும சூடு பட்டுள்ளது திருச்செல்வத்துக்கு இடுபபில சூடுபட்டுள்ளது.


## இலங்கைப் பல்கலைக் கழக வெளிவாரி பட்டப்படிப்புகள்

கல்வியாண்டு 1985/86

பாடநெறிகள் :-

G A. Q. .... .... .... B A.
FIRST IN COMM .........B. COMM.
FIRST IN LAWS ............LL. B.

தகுதிகள்:

* க பொ. த உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் மேற்குறிப்பிட்ட பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.
* விண்ணப்பப்படிவங்களையும் விபரத்திரட்டினையும் பெற விரும்புவோர் REGISTRAR, ASTAN INSTITUTE, JAFFNA. என்ற பெயருக்கு ரூபா 10/– 'காசுக்கட்டளையுடன்' சுய முகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட 9''×4'' அளவுடைய தபால் உறையை அனுப்பிவைத்தல் வேண்டும்.

விண்ணப்ப படிவங்களை அலுவலகத்தில் நேரிலும் பெற்று கொள்ளலாம்.

லண்டன்பரீட்சைக்குரியவகுப்புகளும் ஆரம்பமாகின்றன

IAB. PART I
IAB FOUNDATION & INTER

சகல பாடநெறிகளுக்கான விரிவுரைகள்

ஆரம்பம 2-2-85

விபரங்களுக்கு:-

ASTAN INSTITUTE
166/1 HOSPITAL ROAD, — JAFFNA.


'ஈழமுரசு' சாயிபாபா அடவாடைசிங் அச்சகஸ்தாபனத்தாரால், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப்பகுதியில் 23-1-85 புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.